1975 அக்டோபர் 23] *[பேரவைத் தலைவர்]*

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட நேரம் மவுனமாக நிற்க, இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

(3) வினுக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்

சென்னையில் புறக்காவல் நிலையங்கள்

**1 வினு—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—*

(அ) சென்னை நகரத்தில் (Out Post) காவல் நிலையங்கள் நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அவை எந்த எந்த இடங்களில் நிறுவப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: *(அ) & (இ) சென்னை நகரில் கீழ்ப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள தலைமைச் செயலகப் பணியாளர் குடியிருப்பில் புறக்காவல் நிலையம் (அவுட்-போஸ்ட்) ஒன்றை ஏற்படுத்த காவல் துறைத் தலைமை அதிகாரி அனுப்பிய செயற்குறிப்பினை அரசு ஏற்று, அதற்கான ஒப்புதலை 9—5—1975-இல் வழங்கியுள்ளது.*

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: *தலைவர் அவர்களே, புறக்காவல் நிலையங்கள் துவக்கப்படுவதற்கு ஏதாவது விதிமுறை வகுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியானுல், அவை என்ன என்ன என்பதை அறியலாமா?*

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: *குற்றங்களினுடைய எண்ணிக்கைப் பெருக்கம், மக்கள் தொகை, அருகாமையில் உள்ள காவல் நிலையத்தின் தொலைவு இவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிதாக புறக்காவல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.*